# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

முறையீட்டு மனு எண். 500/2016

ஆணை எண்.119/2016

நாள் :06/07/2016

29.05.2016 நாளிட்ட
தினகரன் நாளிதழ் செய்தி

03.06.2016 நாளிட்ட
தினமலர் நாளிதழ் செய்தி

– முறையீட்டு மனுதாரர்

மண்டல அலுவலர்,
மண்டலம் – 14,
சென்னை மாநகராட்சி,
சென்னை –600 091.

– எதிர் மனுதாரர்

சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம் (மண்டலம் –14) சம்பந்தப்பட்ட வார்டு ஒன்றில் " வீட்டுக்கு வேலை செய்ய வராததால் துப்புரவுப் பணியாளரை வேலையில் இருந்து நீக்கிய கவுன்சிலர் " என்று 29.05.2016 நாளிட்ட தினகரன் நாளிதழில் வெளியான செய்தியினையும் " மாநகராட்சி பணத்தை சம்பளமாகப் பெற்று தன் வீட்டில் வேலை செய்யும் துப்புரவு தொழிலாளி இரண்டு நாள் விடுப்பு எடுத்ததற்காக, அவதூறான வார்த்தைகளைப் பேசி வீட்டை விட்டு விரட்டியது " என்று 03.06.2016 நாளிட்ட தினமலர் நாளிதழில் வெளியான செய்தியினையும் இம்முறைமன்ற நடுவம் கவனிக்க நேர்ந்தது. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவச் சட்டப் பிரிவு 7(1)–ன் கீழ் மேற்படி நாளிதழ்களில் வெளியிடப்பட்ட செய்திகள் " நிர்வாக சீர்கேடு " சம்பந்தப்பட்ட செய்தி எனக்கருதப்பட்டு 500/2106 எண்ணிட்ட அசல் மனுவாகப் பதிவு செய்யப்பட்டது.

## ஆணை

சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர் அறிக்கை மற்றும் விளக்கம் கோரப்பட்டு, அறிக்கை மற்றும் விளக்கம் பரிசீலிக்கப்பட்டதில் மண்டல அலுவலர் அறிக்கையில் கீழ்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். சென்னை மாநகராட்சி, பெருங்குடி மண்டலம் (மண்டலம்–14), 184–வது வார்டில் துப்புரவு தொழிலாளியாக பணியாற்றி வரும் திரு. சி. மூர்த்தி என்பவர், மேற்படி தினகரன் (ம) தினமலர் நாளிதழ் செய்திகளுக்கு சம்பந்தப்பட்ட பணியாளர் துப்புரவுப்

பணியாளர் திரு. சி. மூர்த்தியிடம் மேற்படி நாளிதழ்கள் செய்தி குறித்து விசாரணை மேற்கொண்டதில், செய்திகளில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றச்சாட்டினை மறுத்துள்ளார். சம்பந்தப்பட்ட மாமன்ற உறுப்பினர் தனது சொந்த வீட்டு வேலைகளை செய்ய சொன்னதும் இல்லை தான் செய்ததும் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

2. 10.05.2016 மற்றும் 11.05.2016 ஆகிய நாட்களில் அலுவலகம் வந்து கையெழுத்து போட்டுவிட்டு உடல்நிலை சரியில்லாததால் பணி எதுவும் செய்யாமல் இருந்ததாகவும், பணி செய்யாமல் இருந்ததால் 184–வது வார்டு மாமன்ற உறுப்பினர் தன்னை வேலையை விட்டு நீக்கிவிடுவதாக திட்டினார் தவிர வேறு எதுவும் அவதூறாக பேசவில்லை எனவும் விசாரணையில் தெரிவித்துள்ளார் என மண்டல அலுவலர் அறிக்கை சமர்ப்பித்துள்ளார். மண்டல அலுவலரின் அறிக்கை மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டது. மண்டல அலுவலரின் அறிக்கையை ஏற்றுக் கொள்ளலாம் என இம்முறைமன்ற நடுவம் கருதி கீழ்க்கண்டவாறு முடிவு செய்கின்றது.

3. மாமன்ற உறுப்பினரால் துப்புரவுப் பணியாளர் அவதூறான வார்த்தைகளால் பேசப்பட்டு விரட்டியடிக்கப்பட்டார் என்று நாளிதழ்களின் செய்தி சம்பந்தப்பட்ட பணியாளரே மறுத்துள்ள நிலையில், மாமன்ற உறுப்பினர் திருமதி அமுதா வெங்கடேசன் மீதான செய்தியில் உண்மைத் தன்மை இல்லை என முடிவு செய்யப்படுகின்றது. எனவே இந்நேர்வு சம்பந்தப்பட்ட நடவடிக்கையை இத்துடன் முடித்து வைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பெறுநர்

**மண்டல அலுவலர்,**
**மண்டலம் – 14,**
**சென்னை மாநகராட்சி,**
**எண்.6/64, புழுதிவாக்கம் பிரதான சாலை,**
**உள்ளகரம், புழுதிவாக்கம்,**
**சென்னை –600 091.**

/உண்மை நகல்/

செயலாளருக்காக.